மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எட்டையபுரம் பாரதி யாருடைய வீடுதான் அண்மையில் எடுக்கப்பட்டது. அவர் சென்னை யில் வாழ்ந்த வீட்டை அரசாங்கம் நினைவுச் சின்னமாகப் பயன்படுத்த முயன்று கொண்டிருக்கிறது. பாண்டித்துரைத் தேவர் அவர்களைப் பொறுத்தவரை அந்த ஊர் மக்களும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கட்டடம் இருக்கிறதா, அந்தக் கட்டடத்தைத் தரத் தயாராக இருக்கிறார்களா என்பதை எல்லாம் ஆராய்ந்து மக்கள் முயற்சி எடுத்து அரசுக்குத் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கா. காளிமுத்து : இப்போதுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. மதுரை செந்தமிழ்க் கல்லூரியைப் பாண்டித்துரைத் தேவர் செந்தமிழ்க் கல்லூரி என்று பெயரிட்டு அழைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயர் இலங்க வேண்டுமென்று செய்தவரே பாண்டித் துரைத் தேவர் ஆவார்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் பெயரிடப்பட்டது நான்காவது தமிழ்ச் சங்கம் என்று கூறுவார்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் இடப்பட்ட அந்தப் பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. வேறு எந்த வகையிலாவது அவருடைய நினைவை நிலைநிறுத்தும் வகையில் முயற்சிகளைச் செய்தால் அது பற்றி யோசிக்கலாம். அந்தப் பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

காவிரிப்பூம்பட்டினம்

* 393 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல்கொண்ட பண்டைய காவிரிப்பூம்பட்டினத்தை அகழ் ஆராய்ச்சி செய்திட மத்திய அரசினை நமது தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பூம்புகார் அகழ் ஆராய்ச்சி நடத்த மத்திய அரசு முன் வராவிட்டாலும் ஐ.நா. கலாசார அமைப்பின் நிதி உதவி பெற்றாவது நடத்த மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பூம்புகார் பட்டினத்தைப் பொறுத்தவரையில் அகழ்வாராய்ச்சி செய்யச் சொல்லி தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அது வெற்றியும் பெற்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலையே அகழ்ந்து ஆராய்ச்சி நடத்த நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மத்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் குழு அந்தப் பணிகளைச் செய்யவேண்டி இருக்கிறது. அந்தக் கடற்கரைப் பகுதிக்குக் கீழே பல்வேறு சிறப்பு மிக்க பொருள்களும் 2,000 ஆண்டுகளுக்கு முன்

1971 சூலை 23]

செய்த நாணயங்கள், சோழ நாட்டு, ரோம் நாட்டு நாணயங்கள், அரும் பொருள்கள் கிடைத்து இருக்கின்றன. ஆனால் கடல் அகழ் வாராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னால் அதிலே என்ன சிறப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐ.நா. நாடுகள் அவைக்கு எழுத வேண்டுமென்றால், அந்தத் திட்டத்தின் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறினால் தான் சேர்த்துக் கொள்வார்கள். அதற்கு அடுத்தபடியாக சில பல கருத்துக்களைத் தெரிவித்தால்தான் ஐ.நா. நாடுகள் அவை அதைப் பற்றி நடவடிக்கை எடுக்க முன் வரும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, பூம்புகார் நகரத்தில் பண்டைச் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் கலைக்கூடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அது எப்போது முடிவடைந்து, திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கலைக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. எப்போது திறக்கப்படும், எப்போது முடிவடையும் என்பதற்கான விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. டி. வி. சம்பத் : பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் சிறப்பு வாய்ந்த அந்தப் பகுதியில், துறைமுகம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கரிகால் சோழன் காலத்துப் படகுகளும், கப்பல்களும் தான் அந்தக் கரையில் ஒதுங்குமே தவிர இப்போது இருக்கும் கப்பல்கள் அந்தக் கரையில் ஒதுங்குவதற்கு இல்லை. எனவே, அதைக் கடற்கரையைத் துறைமுகம் ஆக்க இயலாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

Demands of Municipal Employees

* 394 *Q*.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether representation was made to the Government on 4th April 1971 on behalf of the Municipal workers on their demands; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையின் கீழ் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நகரசபையில் பணியாற்றும் சிப்பந்திகளுக்குச் சம்பளக் கமிஷன் சிபார்சுகள் அமலாக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும், கீழ்த்தட்டிலுள்ள சிப்பந்திகளுக்கும் அது பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் நேற்றுக் கூறினார்கள். கீழ்த்தட்டு சிப்பந்திகள் அல்லாது மற்றவர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?